# தகவல் தொழில்நுட்பம் சாதாரண மக்களை சென்றடைய வேண்டும்

## கவர்னர் முகுத்மிதி பேச்சு

புதுச்சேரி, பிப். 22: புதுவை பல்நோக்கு சேவா சங்கம் சார்பில் கடலோரப்பகுதி மீனவர்கள் பேரிடர் காலங்களில் மீனவர்கள் தங்களை தற்காத்துக்கொள்ளும் வகையில் தொழில்நுட்ப வல்லுனர்களுடன் கலந்தாய்வு கருத்தரங்கு நேற்று பல்நோக்கு சேவா சங்க கருத்தரங்கு அறையில் நடந்தது. புதுவை, கடலூர் மறைமாவட்ட பேராயர் அந்தோணி ஆனந்தராயர் முன்னிலை வகித்தார். பல்நோக்கு சேவா சங்க நிர்வாக இயக்குனர் ரட்சகர் நோக்க உரையாற்றினார்.

கவர்னர் முகுத்மிதி கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசியதாவது:

சுனாமியின்போது 2லட்சத்து 80 ஆயிரம் மக்கள் பலியானார்கள். 4.45 பில்லியன் டாலர் அளவுக்கு பொருட்சேதம் ஏற்பட்டது. இந்திய கடலோரங்களில் சுனாமி ஏற்பட்டபிறகுதான் எல்லா நாடுகளும் பேரிடர் மேலாண்மை குறித்து சிந்திக்க ஆரம்பித்தன. இயற்கை பேரிடர் ஏற்படும்போது அதை முன்கூட்டியே அறிய தகவல் பரிமாற்றம் அவசியம். கிடைக்கும் தகவல்கள் சரியான நேரத்தில் மக்களை உஷார் படுத்த வேண்டும். ஐ.நா சபை உள்ளூர் மக்களை இயற்கை சீற்றத்தில் இருந்து காத்துக்கொள்ள தயார் படுத்த வேண்டும் என்று கூறியுள்ளது. இதில் தகவல் மற்றும் தொடர்பியல் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட தகவல் தொழிற்நுட்ப முன்னேற்றம் பேரிடரில் இருந்து காப்பாற்றி கொள்ள நல்ல வாய்ப்பு அளிக்கிறது.

தகவல் தொழில்நுட்பம் அறிவியல் நிலையில் உள்ளது. இதை சாதாரண மக்களும் பயன்படுத்தும் வகையில் கொண்டு செல்ல வேண்டும். வறட்சி, புயல், மழை போன்றவற்றை செயற்கைகோள் மூலம் முன்கூட்டியே கண்டு பிடிக்க முடிகிறது. வருங்காலத்தில் புதிய தகவல் தொடர்பியல் தொழில்நுட்பம் பேரிடர் மேலாண்மையை மாற்றியமைக்கும். காரைக்கால் கிழ காசாக்குடி மேட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு பல்நோக்கு சேவா நிறுவனம் வீடுகளை கட்டிக்கொடுத்திருப்பது பாராட்டத்தக்கது.

இவ்வாறு அவர் பேசினார்.

கருத்தரங்கில் ஐதராபாத் விஞ்ஞானி டாக்டர் பாலகிருஷ்ணன் நாயர் கடல்அலை உயரம், கடலில் மீன்கள் கிடைக்கும் இடங்கள் பற்றி விளக்கி கூறினார்.

சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் டாக்டர் முத்துசாமி, டாக்டர் ராவ், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக பேராசிரியர் ராமசாமி ஆகியோர் பேசினார்கள். புதுவை பிளஸ் என்எல் பொது மேலாளர் லியோ மார்ஷல் ஆண்டனி, பல நோக்கு சேவா சங்க பொது மேலாளர் ரோக்புஷ்பராஜ், பயிற்சி மேலாளர் அலோசியஸ், திட்ட மேலாளர்கள் பாக்யராஜ், ஸ்டீபன் ராஜ் மற்றும் பல்வேறு நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




புதுச்சேரி பலநோக்கு சமூக சேவா சங்கத்தின் சார்பில் நடந்த பேரிடர் மேலாண்மை குறித்த ஆலோசனை கருத்தரங்கை கவர்னர் முகுத்மிதி துவக்கி வைத்தார். அருகில் பேராயர் அந்தோணி ஆனந்தராயர், ரட்சகர்.